# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601



மாநிலத் தலைவர்
மு.சுப்பிரமணியன்

பொதுச் செயலாளர்
மு.அன்பரசு

மாநில துணைத் தலைவர்கள்
ந.குமாரவேல்
ஆ.செல்வம்
ஏஸ்.தமிழ்ச்செல்வி
சு. பார்த்திபன்
மொ.ஞானத்தம்பி
மு.சுப்பிரமணியன்

பொருளாளர்
எம்.தங்கராஜ்

மாநிலச் செயலாளர்கள்
இரா.பன்னீர்செல்வம்
சி.ஆர்.ராஜகுமார்
என்.ஜனார்த்தனன்
தி. கலைச்செல்வி
எம்.சௌந்தரராஜன்
ஏ.பெரியசாமி


**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் பத்திரிகை செய்தி**

06.01.2017 முதல் 08.01.2017 வரை திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12வது மாநில மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இயக்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி,

**பணமதிப்பு நீக்கம்**

2016 நவம்பர் 8 முதல் பண மதிப்பு நீக்கம் (செல்லாத நோட்டு பிரச்சினையால்) அல்லல்படும் நாட்டு மக்களின் துயர் 50 நாட்கள் கழித்தும் இன்னும் தீரவில்லை. வங்கிகளில் பணமாக மாற்ற முடியாத நிலையில் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். இன்னும் 80 சதவீத ஏ.டி.எம்.கள் மூடிக் கிடக்கின்றன. இதனால் பல இன்னல்களுக்கு ஆளாகி மக்களின் அன்றாட வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது, அதேபோல் அரசு ஊழியர்களும் சொல்லொணா இன்னல்களுக்கு ஆட்பட்டுள்ளனர். மாத சம்பளத்தை ஏடிஎம்மில் எடுக்கச் சென்றால் ஒரு நாள் முழுவதும் வீணாவதுடன், பல நேரங்களில் பணம் இல்லாமல் திரும்பி வர நேரிடுகிறது.

ரொக்கம் இல்லாத நாட்டை உருவாக்கப் போவதாக கூறும் பிரதமர் மோடி கார்டுகள் மூலமும், செல்பேசி மூலமும் பணப் பரிவர்த்தனை செய்ய மக்கள் பழக வேண்டும் என்று கூறுகிறார். ஆனால் உண்மை என்னவென்றால் உலகில் சில வளர்ந்த சிறிய நாடுகளில் கூட பணமில்லா பரிவர்த்தனை கொள்கை அமுல்படுத்தப்பட்டு அது தோல்வியில் முடிந்ததுதான் வரலாறு. ஆனால். 130 கோடி மக்கள் தொகை இந்தியாவில் பிரதமர் மோடி சொல்லும் பணமில்லா பரிவர்த்தனை என்பது நிச்சயமாக தோல்வியடையும்.

பிரதமர் மோடி மக்கள் தங்களுடைய பணத்தை வாரத்திற்கு ரூ. 24,000 தான் எடுக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறார். நாம் சம்பாதித்த பணத்தை எடுப்பதற்குக்கூட தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பிரதமரின் நடவடிக்கை என்பது சரியான செயல் அல்ல.

எனவே, மக்கள் புழக்கத்திற்கு பயன்படும் வகையில் ரூ. 500 மற்றும் ரூ. 100 நோட்டுக்களை உடனடியாக விநியோகம் செய்திட வேண்டும். அனைத்து ஏடிஎம்களையும் புதிய ரூபாய் நோட்டுகளுக்கு தகுந்தாற்போல் மாற்றி அமைத்து உச்சவரம்பின்றி பணம் எடுத்திட வசதி செய்திட வேண்டும். ரூபாய் நோட்டு பிரச்சினை மற்றும் வறட்சியின் காரணமாக உயிரிழந்த விவசாயிகள் குடும்பங்களுக்கும், வரிசையில் நின்று இறந்து போன பொதுமக்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும் மற்றும்

**2015-16ஆம் ஆண்டுக்கான போனஸ் வழங்கக் கோரி...**

மத்திய அரசு அதன் பணியாளர்களுக்கு போனஸ் தொகையினை 2014-15ஆம்ஆண்டு முதல் ரூ.7000 என உயர்த்தி வழங்கியுள்ளது. இதனடிப்படையில் 2017ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழக அரசு ஊழியர்கள்/ஆசிரியர்கள்ஓய்வூதியர்கள் ஆகியோருக்கு வழங்கவுள்ள போனஸ் தொகையினை சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்கு ரூ. 7000 எனவும், ஏ மற்றும் பி பிரிவு அலுவலர்கள் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு ரூ.3000 எனவும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூ. 1500 எனவும் உயர்த்தி வழங்கிட ஆணை வெளியிட வேண்டும். மத்திய அரசு 2014-15ஆம் ஆண்டு போனஸ் தொகையினை உயர்த்தி வழங்கியது போல் தமிழக அரசும் 2014-15ஆம் ஆண்டு முதல் நிலுவை தொகை வழங்கிட வேண்டும் என வலியுறுத்தியும்,

11.01.2017 அன்று தமிழகம் முழுவதும் வட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தமிழகத்தில் அரசு அலுவலகங்கள் முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்கும் சக்தி மிக்க ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இச் செய்தியினை தங்கள் ஊடகத்தில் வெளியிட்டு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவண்,

(மு.சுப்பிரமணியன்)
மாநிலத் தலைவர்

9/1/17
(மு.அன்பரசு)
பொதுச் செயலாளர்